ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2309/40 - 2022 දෙසැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2022.12.09
2309/40 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டு முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டம்***

*1985ஆம் ஆண்டு 48ஆம் இலக்கம் மற்றும் 1987ஆம் ஆண்டு 28ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டு முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால் விதிக்கப்படுகின்ற ஒழுங்கு விதிகள்*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, திசெம்பர் 09.

1A - PG 6107 — 406 (2022/12)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் **“ 2022 ஆம் ஆண்டு 23 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள்”** என அழைக்கப்படும்.

2. 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆம் திகதிய இலக்கம் 2044/40 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட விஷேட இறக்குமதி அனுமதிப் பத்திர ஒழுங்கு விதிகள் மற்றும் காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட, 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 2189/4 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் பிரகடனப்படுத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்கம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்ட ஒழுங்கு விதிகள், இதன் மூலம் மேலும் திருத்தி அமைக்கப்படுகின்றன.

3. திருத்தம் செய்யப்பட்ட விஷேட இறக்குமதி அனுமதிப் பத்திர ஒழுங்கு விதிகள் பிரசுரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆம் திகதிய இலக்கம் 2044/40 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் **I ஆவது உப அட்டவணைக்கு** கீழ்க் காணப்படும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட குறிப்புக்கள் இதன் மூலம் உள்ளடக்கப்படுவதோடு,அப்பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திர (ICL) விநியோகம் மீள் அறிவிக்கும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்படுகின்றது.

| நிரல் I<br>**தலைப்பு இலக்கம்** | நிரல் II<br>**ஒருகிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டுத் தலைப்பு** | | நிரல் III<br>**விபரம்** | நிரல் IV<br>**விபரம்(L)** |
|---|---|---|---|---|
| **10.06** | | | *அரிசி* | |
| | 1006.30.00 | - | தீட்டப்பட்ட அல்லது பதனிடப்பட்ட அல்லது செய்யப்படாத அல்லது மொத்தமாக அல்லது குறைந்தளவில் குத்திய அரிசி | |
| | | --- | கரடு முரடான அரிசி : | |
| | 1006.30.19 | ---- | ஏனையவை | **L** |
| | | --- | அவித்த அரிசி: | |
| | 1006.30.29 | ---- | ஏனையவை | **L** |

4. மேலே ஒழுங்கு விதி இலக்கம் 03 இல் எவ்வாறு குறிப்படப்பட்டதோ, கீழ்க் காணப்படும் சந்தர்ப்பங்களில் அதில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள, அப்பொருட்கள் வந்தடையும் முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரத்திற்கு (ICL) இன் கீழ் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது,

(அ) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியுடன் கப்பல்/விமானத்தில் ஏற்றப்பட்ட மற்றும் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் வந்தடைந்த பொருட்கள்

(ஆ) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நிருவப்பட்ட கடனட்டைக் கடிதம் (LC) அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்

(இ) 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட முற்பணக் கொடுப்பனவுகள் அடிப்படையின் பேரில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்

5. இவ் ஒழுங்கு விதிகள் வினைத்திறன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவதனை முன்னிட்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் மூலம் இலங்கைச் சுங்கம் மற்றும் அனுமதிப் பத்திரதாரர் வங்கிக்குத் தேவையான “செயற்பாட்டு ஆலோசனைகள்”வழங்கப்படுகின்றது.

**6**. இவ் ஒழுங்கு விதிகள் தொடர்பாக எழுகின்ற எந்த பிரச்சினை தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

**7**. திருத்தம் செய்யப்பட்ட, விஷேட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரக் கட்டணம் பிரசுரிக்கப்பட்ட 2016ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11ஆம் திகதிய 1953/28ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் I ஆவது உப அட்டவணைக்கு, கீழ்க் காணப்படும் பொருட்களுக்காக செலுத்தப்பட வேண்டிய இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரக் கட்டணம் இத்தால் மூலம் உள்ளடக்கப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | பொருட்கள் | இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| 87 | அரிசி | வி.அ.க. பெறுமதியில் 0.1% |